# Model question paper 2019-2020 / மாதிரி வினாத்தாள் 2019-2020

**X STD - பத்தாம் வகுப்பு**

**Register Number/** பதிவு எண்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**SOCIAL SCIENCE - சமூகஅறிவியல்**

**வினாத்தாள் எண்:- 2**

Time Allowed: 15 min + 3.00 hrs — Maximum Marks:100

கால அளவு: 15 நிமி + 3.00 மணி — மொத்த மதிப்பெண்கள்:100

**அறிவுரை:** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைகண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு: இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.**

## Part-1/பகுதி-1

(Marks:14)/(மதிப்பெண்கள்:14) 14 x 1 = 14

**குறிப்பு:(1) இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?
   அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள் இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள்
3. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்த காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
   அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்
   இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ
4. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது?
   அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) லக்னோ ஈ) நாக்பூர்
5. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பட்டது?
   அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை
6. பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
   அ) அயன மண்டல பசுமைமாறாக் காடுகள் ஆ) இலையுதிர் காடுகள்
   இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக்காடுகள்
7. காபி அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம் -----------------
   அ) மேற்கு வங்கம் ஆ) கர்நாடகம் இ) ஒடிசா ஈ) பஞ்சாப்
8. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் -----------------
   அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புது டெல்லி ஈ) ஹைதராபாத்

9. **கூற்று:** செம்மண்ணில் அதிகளவு இரும்பு ஆக்ஸைடுகள் உள்ளன.
**காரணம்:** இது சுவருதலால் உருவாகிறது.
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று தவறு.

10. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் ------------------
அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள் இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல்

11. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.
i) பஞ்சசீலம் ii) பொக்ரானில் அணுவெடிப்புச் சோதனை
iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம் iv) முதல் அணுவெடிப்புச் சோதனை
அ) (i),(iii),(iv),(ii) ஆ) (i),(ii),(iii),(iv) இ) (i),(ii),(iv),(iii) ஈ) (i),(iii),(ii),(iv)

12. -------------------- மத்திய அரசின் அரசியலமைப்புத் தலைவர் ஆவார்.
அ) குடியரசுத் தலைவர்ஆ) தலைமை நீதிபதி இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

13. முதன்மைத்துறை இதனை உள்ளடக்கியது.
அ) வேளாண்மை ஆ) தாணியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

14. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்
அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆ) மைய, மாநில மற்றும் கிராம
இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்துகள் ஈ) ஏதுமில்லை

# Part-II/பகுதி-II

(Marks:20)/(மதிப்பெண்கள்:20) 10 x 2 = 20

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**
**28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

15. மன்றோ கோட்பாட்டை விளக்குக.
16. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
17. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
18. தங்களுடைய எழுத்துகளின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடுக.
19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
20. கால்நடைகள் என்றால் என்ன?
21. இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகளை குறிப்பிடுக.
22. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?
23. உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?
24. வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?
25. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகலாவிய குழுக்களைப் பட்டியலிடுக.
26. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?
27. பசுமை புரட்யின் விளைவுகள் என்ன?
28. வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.

# Part-III/பகுதி-III

(Marks:50)/(மதிப்பெண்கள்:50) 10 x 5 = 50

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**
**42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக:-**
   i) உலகலாவிய மனித உரிமைகள் பிரகடனம் மனித உரிமைகள் குறித்து -------- பிரிவுகளைக் கொண்டிருந்தது.
   ii) ----------- சட்டம் பழங்குடியினரல்லாத மக்களை பழங்குடி நிலத்தில் நுழைய தடைவிதித்தது.
   iii) மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ----------- ஆகும்.
   iv) ------------- இமய மலையில் உள்ள சிறிய அரசு ஆகும்.
   v) டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியை -------------- இல் கைப்பற்றினர்.

30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.

32. **அ) வேறுபடுத்துக:-**
   **i)** வானிலை மற்றும் காலநிலை
   **ii)** உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்

   **ஆ) காரணம் கூறுக:-**
   மழைநீர் சேமிப்பு அவசியம்.

33. மீட்பியக்கங்களின் பங்களிப்பை சமய சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்போடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.
34. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.
35. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
36. தமிழ்நாட்டின் பீடபூமி நிலத்தோற்றத்தின் தன்மையை விவரிக்கவும்.
37. மாநிலங்களவை மற்றும் மக்களவையின் பணிகளைப் பட்டியலிடுக.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் என்ன?

41. **பின்வருவனவற்றிற்கு காலக்கோடு வரைக:**
   1920 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகள்

42. **இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்:-**
   i) மீரட் ii) லக்னோ iii) பாரக்பூர் iv) ஜான்சி v) தண்டி

# Part-IV/பகுதி-IV

(Marks:16)/(மதிப்பெண்கள்:16) 2 x 8 = 16

**குறிப்பு: ஏதேனும் 1 வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்**

**43.** **அ)** உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-1939) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.

**(அல்லது)**

**ஆ)** கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்**

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

i) பாக் நீர்சந்தி
ii) விசாக பட்டிணம்
iii) பாமீர் முடிச்சு
iv) வேம்பநாடு ஏரி
v) வடகிழக்கு பருவக் காற்று வீசும் திசை
vi) குருசிகார் சிகரம்
vii) சோழ மண்டல கடற்கரை
viii) பிரம்மபுத்திரா ஆறு

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

i) தொட்டபெட்டா
ii) காவிரி ஆறு
iii) கல்வராயன் மலை
iv) தேயிலை விளையுமிடம்
v) கன்னியாகுமரி
vi) பெரியார் அணை
vii) முதுமலை சரனாலயம்
viii) இந்திய பெருங்கடல்



C.Ramasubramanian
V.V.D.Memorial.Hr.Sec.School
Tuticorin-628002
Cell Number:9965255226 Email:senrammani@gmail.com